DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.44/2025

PW - 6

| | | |
|---|---|---|
| Name | : | உமாமகேஸ்வரி (Lw - 12) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(எதிரி ஆஜர்)**

முதல் விசாரணை **Date : 19.05.2026**

நான் தற்போது திருச்செங்கோடு வட்டாரபோக்குவரத்து அலுவலகத்தில் மோட்டர் வாகன ஆய்வாளர் நிலை 1ஆக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 22.08.2022ந் தேதி நான் நாமக்கல் தெற்கு வட்டாரபோக்குவரத்து அலுவலகத்தில் பணியிலிருந்த போது எருமப்பட்டி காவல் நிலைய குற்ற எண்.217/2022 சட்டப்பிரிவு 279, 337, 304(A) இதச வழக்கில் சம்மந்தப்பட்ட TN 28 BE 9126 பதிவெண்கொண்ட கனரக LPG டேங்கர் வாகனம் மற்றும் 02.12.2022ல் KA 28 EC 2180 என்ற பதிவெண்கொண்ட இருசக்கர வாகனத்தை ஆய்வு செய்து அறிக்கை வழங்கும்படி காவல் ஆய்வாளர் வேண்டுகோள் கடிதத்துடன் KA 28 EC 2180 வாகனத்தை ஆய்விற்காக ஆஜர்படுத்தினார் மேலும் விபத்தில் சம்மந்தமப்பட்ட மற்றொரு வாகனமான TN 28 BE 9126 பதிவெண்கொண்ட கனரக LPG டேங்கர் வாகனம் இயக்கி பார்க்க முடியாத நிலையில் இருந்ததால் சம்பவ இடத்திற்கு வந்து ஆய்வு செய்யுமாறு வேண்டுகோள் வழங்கப்பட்டது.

TN 28 BE 9126 வாகனத்தின் தகுதி சான்று, அனுமதி சீட்டு காப்பீட்டு சான்று, ஓட்டுநரின் உரிமம் நடைமுறையில் இருந்தது. TN 28 BE 9126 பதிவெண்கொண்ட கனரக LPG டேங்கர் வாகனத்தை சம்பவ இடத்தில் வைத்து ஆய்வு செய்தேன்.

வாகனத்திற்கு கீழ்கண்ட சேதாரங்கள் ஏற்பட்டிருந்தது. முன் காற்றுதடை கண்ணாடி உடைந்திருந்தது. முன்புற சென்டர் கிரில் காணவில்லை. முன்புற பம்பர் வளைந்திருந்தது. முன்புற பதிவு எண் பலகை வளைந்திருந்தது. முன் வலதுபுற வீல்ஆர்ச் வளைந்தும் சேதம் அடைந்தும் இருந்தது. முன் வலதுபுற கவுல் சேதம் அடைந்து இருந்தது. முன் வலதுபுற முகப்பு விளக்கு உடைந்து இருந்தது. முன்வலதுபுற பின்புறம் பார்க்கும் கண்ணாடி உடைந்திருந்தது. வலதுபுற ஓட்டுநர் கதவு வளைந்திருந்தது. வலதுபுற ஓட்டுநர் புட்ஸ்டெப் வளைந்திருந்தது. ஓட்டுநர் இருக்கை சேதம் அடைந்திருந்தது. ஆக்சிலேட்டர், பிரேக், கிளட்ச் பெடல் வளைந்திருந்தது. டேஷ் போர்டு அனைத்து கேஜஸ் உடைந்தும் சேதம் அடைந்தும் இருந்தது. ஸ்டேரிங் வீல் வளைந்திருந்தது. ஸ்டேரிங் காலம் வளைந்திருந்தது. விபத்து வாகனத்தின் சேதாரங்கள் காரணமாக இயக்கிபார்க்க இயலவில்லை. இந்த விபத்தானது எந்த விதமான இயந்திரகோளாறினாலும் ஏற்படவில்லை என்று சான்று வழங்கினேன். **(** TN 28 BE 9126 வாகனத்திற்கான மோ**.**வா**.**அறிக்கை அ**.**சா**.**ஆ**.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)**

இதே வழக்கில் சம்மந்தப்பட்ட மற்றொரு வாகனமான KA 28 EC 2180 Hero இருசக்கர வாகனத்தை எனது அலுவலகத்தின் முன்பு வைத்து ஆய்வு செய்தேன். வாகனத்தின் காப்பீட்டு சான்று ஆய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. ஓட்டுநர் உரிமம் ஆய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. வாகனத்திற்கு கீழ்கண்ட சேதாரங்கள் ஏற்பட்டிருந்தது. போர்க் துண்டாகி இருந்தது. முன்புற பம்பர் வளைந்திருந்தது. கேண்டில்பார் வளைந்திருந்தது. முன்புற முகப்பு விளக்கு உடைந்தும் சேதம் அடைந்தும் இருந்தது. பதிவு எண் பலகை வளைந்திருந்தது. ஸ்பீடா மீட்டர் உடைந்திருந்தது. பின்புறம் பார்க்கும் கண்ணாடி காணப்படவில்லை. முன்புற சஷ்பென்சன் சேதம் அடைந்திருந்தது. முன் சக்கம் காணப்படவில்லை. எரிபொருள் டேங்க் வளைந்தும் நெலிந்தும் இருந்தது. இஞ்சின் நகர்ந்து இருந்தது. வாகனத்தின் முன்பகுதி முழுவதும் சேதம் அடைந்திருந்தது. விபத்து வாகனத்தின் சேதாரங்கள் காரணமாக இயக்கிபார்க்க இயலவில்லை. இந்த விபத்தானது எந்த விதமான இயந்திரகோளாறினாலும் ஏற்படவில்லை என்று சான்று வழங்கினேன். **(KA 28 EC 2180 Hero** இருசக்கர வாகனத்திற்கான மோ**.**வா**.**அறிக்கை அ**.**சா**.**ஆ**.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

விபத்து நடதந்ததற்கு பின்னிட்டு எத்தனை நாட்கள் கழித்து வாகனத்தை ஆய்வு

செய்தேன் என்றால் TN 28 BE 9126 பதிவெண்கொண்ட கனரக LPG டேங்கர் வாகனத்தை 7 நாட்கள் கழித்தும், KA 28 EC 2180 Hero இருசக்கர வாகனத்தை சுமார் 3 1/2 மாதங்கள் கழித்து ஆய்வு செய்தேன். விபத்துக்குள்ளான வாகனங்களை ஆய்வு செய்யும்போது அவை இயக்ககூடிய நிலையில் இல்லை என்றால் சரிதான்.

ஆய்வின்போது KA 28 EC 2180 Hero இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்த நபரின் ஓட்டுநர் உரிமம் என்னிடம் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். விபத்துக்குள்ளான வாகனங்களை நான் ஓட்டி பார்த்து ஆய்வு செய்தேனா என்றால் இல்லை. இரு வாகனங்களும் ஓட்டிபார்க்கமுடியாத நிலையில் இருந்தது. பொதுவாக ஒரு வாகனத்தை ஓட்டி பார்க்காமல் அதில் ஏற்பட்ட சேதாரங்களை குறிப்பிட்டு கூறமுடியுமா என்றால் கூறமுடியும். வாகனத்தை இயக்கி பார்க்காமல் அவ்வாகனத்தில் இயந்திர பழுது ஏற்பட்டுள்ளது என கூறமுடியாது என்றால் சரியல்ல. விபத்துக்குள்ளான இருசக்கர வாகனத்தின் வலது பக்கத்தில்தான் அதிகம் சேதம் அடைந்திருந்தது என்றால் சரியல்ல. முன்புறம் முழுவதும் சேதம் அடைந்திருந்தது. இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லாத நிலையில் அவர் தனது வாகனத்தை சரிவர ஓட்டிவராமல் சாலையில் வந்து விபத்தை ஏற்படுத்தினார் என்றால் அது பற்றி கூற இயலாது.

மறுவிசாரணை**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**